02479 = 3904/2014

**குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.ர.சக்திவேல்,எம்.எஸ்.சி.,பி.எட்**

ந.க.அ4/ 1996 / 2014 நாள்: 21.06.2016

பொருள்: கிராம நிர்வாகம் - பணிவரன்முறை - கரூர் மாவட்ட வருவாய் அலகு - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்டது - 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி வரண்முறை முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பியது - அரசாணை மற்றும் வழிமுறைகள் வரப்பெற்றது - திரு.க.பாஸ்கர்ராஜ் என்பவருக்கு பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1 கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் எண் ந.க.அ5/ 15430/ 2008 நாள்: 24.02.2015
2 குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ4/ 1996 / 2014 நாள்: 26.08.2014
3 அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016
4 சென்னை வருவாய் நிருவாக இணை ஆணையர் அவர்களின் கடிதம் எண். ஆகு 2/13013/2015, நாள்.05.04.2016.
5 கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் எண் ந.க.அ5/ 15430 / 2008 நாள்: 20.05.2016

********

**ஆணை:-**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் கள்ளை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து, பணிக்காலத்தில் 25.01.2008 அன்று இறந்து போன மா.கந்தசாமி (லேட்), என்பவரின் மகன் திரு.க.பாஸ்கர்ராஜ் என்பவருக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.அ3/15430/2008 நாள்.19.08.2014ன்படி கிராம நிர்வாக அலுவலராக பணிநியமனம் வழங்கி குளித்தலை கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து குளித்தலை வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள் ந.க.அ4/1996/2014 நாள்.26.08.2014ன்படி கிருஷ்ணராயபுரம் வட்டம், சிவாயம் தெற்கு, கிராம நிர்வாக அலுவலராக பணியிடம் வழங்கப்பட்டு தனியர் மேற்படி கிராமத்தில் 27.08.2014 முற்பகல் முதல் கிராம நிர்வாக அலுவலராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

தனியரது பணியினை கிராம நிருவாக அலுவலர் இனத்தில் 27.08.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசிடமிருந்து ஆணை வழங்கிட பார்வை–1ல் காணும் கடிதத்தில் பரிந்துரை செய்து, வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டத்தில், பார்வை–4ல் காணும் வருவாய் இணை ஆணையர் அவர்களின் கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை–3ல் காணும் அரசாணையில் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

(1) 01.02.2016 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படுகிறது என்றும்,

(2) மேலே பத்தி 1–இல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள்(Appointing Authority)அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை

(Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர் என்றும்,

(3) இதனைத் தொடர்ந்து இனம் 1–இல் கண்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும் பதவிகளில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்திய பின், 1954–ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(B) –ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு உரிய முன்மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும்,

(4) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித் தளர்வு/அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில் அவர்களை தற்காலிக அரசுப் பணியாளர்களாக கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்றும்,

(5) மேலே பத்தி 4–இல் குறிப்பிடப்பட்ட அரசுப் பணியாளர்கள் பொருட்டு உரிய விதித்தளர்வு/அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும் என்றும் அதன் பின்னர் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெற்று, பின்னர் விதித்தளர்வு/அரசாணைகளுக்கு விலக்கு குறித்த அரசாணை வெளியிடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வரசாணையில் தெரிவித்துள்ளவாறு தனியர் க.பாஸ்கர்ராஜ் என்பவரின் பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படப்படுகிறது.

| வ. எண் | கிராம நிர்வாக அலுவலரின் பெயர் (திருவாளர்) | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை நாள் |
|---|---|---|---|
| 1. | க.பாஸ்கர்ராஜ் | 27.08.2014 முற்பகல் | 27.08.2014 முற்பகல் |

மேற்படி உத்தரவினை, தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து, பதிவு செய்யப்பட்ட பணிப்பதிவேட்டின் நகலுடன் கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய உள்ளீட்டில் வருவதால் உரிய முன்மொழிவுகளை நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி தயார்செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியர்க்கு உத்தரவிடப்படுகிறது.

21.06.16

வருவாய்க்கோட்டாட்சியர்,
குளித்தலை

21.6.16

பெறுநர்
சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்

நகல்: கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

நகல் : வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம் - உரிய நடவடிக்கைக்காக

ந.க. அ3/3904/2014 நாள்: 08.2016

சார்வு செய்யப்படுகிறது.

வட்டாட்சியர்
கிருஷ்ணராயபுரம்

பெறுநர்,
திரு. க. பாஸ்கர்ராஜ்
கிராமநிர்வாக அலுவலர்
பஞ்சப்பட்டி கிராமம்
கிருஷ்ணராயபுரம் வட்டம்.

29.8.16